| கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை 2013<br>முன்னோடிப் பரீட்சை<br>கல்வி அமைச்சு | | |
|---|---|---|
| தமிழ் 11 | T 11 | மூன்று மணித்தியாலங்கள் |

அறிவுறுத்தல்கள்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக :
- ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்த விடைகள் தரப்பட்டுள்ளன.அவற்றள் பொருத்தமானவிடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புககுறிக்குள் இடுக:

.

1) மேலிதழும் கீழிதழும் பொருத்தப் பிறக்கும் எழுத்துக்கள் எவை?
 1.ம்,ப் 2.ம் ,வ் 3. ப்,த் 4.ப்,க் 5. ம்,ச் (……)

2) இதழ் குவியாத உயிர் கொண்ட சொல்
 1.மரம் 2.வசம் 3.மலை 4. பச்சை 5.நலம் (…….)

3) மொழி முதலில் மட்டும் வரும் வினா எழுத்துக்களின் கூட்டம்
 1.ஆ:ஏ 2.எ:யா 3.ஆ:ஓ 4. ஏ:அ 5.ஏ:எ (…….)

4) புறச்சுட்டாக அமையும் சொல்
 1.ஆ +அன் 2.உ+ வை 3.அ + வீடு 4. இ+ து 5.அ + ள் (…….)

5) இனவெழுத்து இல்லாத எழுத்துக் கூட்டம்
 1. உயிர் எழுத்து 2. வல்லின எழுத்து 3. மெல்லின எழுத்து
 4. இடையின எழுத்து 5. உயிர் மெய் எழுத்து
 (…….)

6) மொழியியலாளர் எழுத்துக்கள் தோன்றுவதற்குக் காரணமான மூல ஒலியை எவ்வாறு அழைப்பர்?
 1.மாற்றொலி 2. உரசொலி 3. வெடிப்பொலி 4.ஒலியன் 5. சார்பெழுத்து (…….)

7) அங்காத்தல் முயற்சியால் பிறக்கும் ஒலி
 1.ஆ 2.உ 3.ஒ 4. ஔ 5. ஊ (…….)

8) வேற்று நிலை மெய்மயக்கமாக அமையாதது
 1.கள்வன் 2. செய்தி 3. தண்டு 4. மஞ்ஞை 5. நன்றி (…….)

9) அல்வழிப்புணர்ச்சியாக அமையும் சொல்
 1.ஆ டிவரும் 2. சந்திரக்கலை 3. கனவு கண்டு
 4.கண்பொறி 5. கோட்டுமரம் (…….)

10) செய்து விட்டான் என்பதில் விடு என்பது,
 1.துணைவினை 2.ஆக்கவினை 3. தனிவினை
 4.முதல் வினை 5.கூட்டுவினை (…….)

11) "கெடுப்பதூம் கெட்டார்க்குச் சார்பாய்" இதில் வந்துள்ள அளபடை ,
 1.உயிரளபெடை 2.ஒற்றளபெடை 3.மெய்யளபெடை
 4.உயிர்மெய்அளபெடை 5.போலி (…….)

12) நெடிற்றொடற்க் குற்றியலுகரமாக அமையாதது ,
 1.பாகு 2.நாடு 3.தூசு 4.சூது 5.புற்று (…….)

13) ஒரு சொல்லாகக் கொள்ளும் போது ஒரு பொருளையும்,தொடர் மொழியாகும் போது வேறொரு தரும் சொல்:

1.இராப்பகல் 2.மரம் வளர்ந்தது 3.இசைத்தேன்

4.நீரேரி 5. முதலாளி (.......)

14) குணப்பண்பை உணர்த்தி வேற்றுமை ஏற்காத சொல்,

1.உரிச்சொல் 2.குணப்பெயர் 3.தொழிற்பெயர்

4.இடைச்சொல் 5.காலப்பெயர் (.......)

15) ஐகாரக் குறுக்கம் இடையில் வரும் சொல் ,

1.தாழை 2.மனை 3.வலைச்சி

4.ஐந்து 5.ஔடதம் (.......)

16) கலை விழாவிற்கு வந்தோரால் இப்பரிசில்கள் வழங்கப்பட்டன. இங்கு 'வந்தோரால்' என்பது

1.வினைமுற்று 2. வினையாலணையும் பெயர் 3.குறிப்புவினைமுற்று

4. தெரிநிலை வினைமுற்று 5.எதிர்மறைவினைமுற்று (.......)

17) பின்வருவனவற்றில் இலக்கண வழுவற்ற வாக்கியம்,

1.ஒவ்வொரு பிள்ளைகளும் பாட்டுப்பாடினர்

2.இன்று பாரதியார் படத்தைக் காண்பிக்கப்படும்

3.கமலன் பல இனிய சொற்களையே பாவித்தான்

4.அவை வேட்டை நாய் ஆனாலும் விரைவாய் ஓடா.

5.இடம் பெயர்ந்தோர் பலர் வீடுகள் மேய்ந்தனர் (.......)

18) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர் அல்லாதது எது?

1. பெண்ணியம் 2. வெறித்தனம் 3. பிரபுத்துவம் 4. திறனாய்வாளன்

5. நீர்வீழ்ச்சி (.......)

19) பின்வருவனவற்றுள் உம்மை இடைச்சொல எதிர்மறைப்பொருள் தரும் தொடர்,

1.நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்

2.எல்லோர்க்கும்நன்றாம் பணிதல்

3.நன்றே தரினும் நடுவிகள் தாம் ஆக்கத்தை அன்றே கழிய விடல்

4.அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்

5.எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் (.......)

20) பின்வருவனவற்றுள் பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்த வாக்கியம்

1.நன்றும் தீதும் பிறர்தரவாரா

2.யாதுமூரே யாவருங் கேளீர்

3.ஓதுவதொழியேல்

4.ஐயமிட்டுண்

5.உப்பிட்டவரை உள்ளளவும் நினை (.......)

(20 புள்ளிகள்)

ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்குசுருக்கமான விடை தருக:

1) மாத்திரை என்றால் என்ன? தமிழ் எழுத்துக்களின் மாத்திரை அளவுகளைத் தருக?

2) வினையாலணையும் பெயர் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக:

3) இடவழுவமைதியாவது யாது ?,உதாரணம் தந்து விளக்குக:

4) தொழிற்பெயர் விகுதிகள் இரண்டினை உதாரணம் காட்டி விளக்குக:

5) பின்வருவனவற்றை விதி கூறிப் புணர்த்துக:

அ. மணி + அழகு ஆ.விளா + காய்

(10புள்ளிகள்)

2. (அ) பின்வரும் உரைப்பகுதியின்சாராம்சத்தை விளக்குக 50 சொற்களில் சுருக்கி எழுதுக:

ஒரு மொழியின் இரு வேறுபட்ட வடிவங்களே பேச்சு மொழியும் எழுத்து மொழியுமாகும். பேச்சு மொழி முந்தியது. எழுத்துமொழி பிந்தியது. ஒன்றிலிருந்து ஒன்று பிறந்தது. ஒன்றையொன்று அனுசரித்துச் செல்வது.

பேச்சு மொழி முந்தியது எனும்போது, ஒரு மொழி தோன்றும் பொழுது முதலில் தோன்றுவதும் பேச்சு வழக்குத்தான். மனிதன் மொழி பழகத் தொடங்கும்பொழுது முதலில் பழகுவதும் பேச்சுவழக்குத்தான். பேச்சு மொழியிலேயே மிகப் பழைய நாட்டார் பாடல்கள் தோன்றின. அதன் பின்னரே செய்யுள் இலக்கணத்திற்கு அமைய செய்யுள்கள் தோன்றின. இந்த இலக்கியங்கள் பிறந்தபின்பே இலக்கண ஆசிரியர்கள் மொழிக்கு இலக்கணம் வகுத்தனர். இலக்கண விதிக்கு அமையச் சுத்தமாக எழுதுவது எழுத்துமொழி.

மொழி அன்றாட வாழ்விலே பலதரப்பட்டவர்களாலும் கையாளப்படுகின்றது. இவ்வாறு கையாளப்படும் போது தமது வசதிக்காக மொழியின் இலக்கண இறுக்கத்தை கைவிடத் தொடங்கினர். இவ்வாறு பேசப்பட்ட மொழிவடிவமே பேச்சுமொழி எனலாம். பேச்சுமொழியா எழுத்துமொழியா சிறந்தது என்ற வாதம் நீண்டகாலமாக இருந்து வருகிறது. பேச்சு மொழியைவிட எழுத்துமொழியே உண்மையான மொழி. தரமுயர்ந்த மொழி என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவியது. இன்று நிலவுகின்றது.

இது தேவையற்ற வாதம் இரண்டுமே சிறந்தவைதான். இரண்டு மொழிவடிவங்களையும் அதன் தேவை, இடமறிந்து பயன்படுத்தும் தெளிவு பிறந்திடுமாயின் இரண்டையும் பிரித்துப்பார்க்கும் எண்ணம் வராது. எழுத்துமொழி ஒருவருடைய புகைப்படம் என்றால் அவருடைய உண்மையான உருவம் பேச்சுமொழி.

இலக்கணமெல்லாம் எழுத்துமொழிக்கே சொல்லப்பட்டவை ஆனால் இன்றைய மொழியிலோ பேச்சுமொழியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகின்றது. எழுத்துமொழியை விட பேச்சுமொழியே வலிமையும் ஈர்ப்பும் உடையது. என்பது பலரது கருத்து.

உரையாடல், நாடகம், சிறுகதை போன்றவற்றில் அதிகம் பயன்படுத்தப்படுவது பேச்சுமொழியே எழுத்துமொழி நியமமொழியாக இருக்கும் பேச்சுமொழி நாட்டுக்குநாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டு இருக்கும். எமது தமிழ்மொழியை எடுத்துக்கொண்டால் இந்திய பேச்சுவழக்கிற்கும் இலங்கை பேச்சுவழக்கிற்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதோடு, இலங்கைக்குள்ளும் யாழ்ப்பாணத்தில் ஒருவகைப் பேச்சுவழக்கும் மட்டக்களப்பில் இன்னொருவகைப் பேச்சுவழக்கும், தென்னிலங்கையில் பிரிதொருவகை பேச்சுவழக்கும் நிலவுவதைக் கண்டுகொள்ளலாம். இவ்வாறு பேச்சுவழக்குகள் வேறுபட்டு அமைவதால் மொழிக்குப் பாதிப்புக்கள் கிடையாது.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வம் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக:

இலக்கியம் என்றால் என்ன?சிலப்பதிகாரம், கம்பராமாயணம்,இந்திய சரித்திரம்,பஞ்சாங்கம் இவற்றில்இலக்கியம் என்பவை யாவை? என்று கேட்டால் எளிதில் விடை கூறி விடலாம்.அச்சொல்லின் பொருளை எடுத்து இலக்கணம் கூறி விளக்குவது கடினமாக இருக்கலாம்.எனினும் அச்சொல் எதனைக்குறிக்கின்றது, என்று ஒருவாறு கூற முடிகிறதன்றோ? பஞ்சாங்கமும் சிலப்பதிகாரமும் நூல்கள் பொருள் அடங்குமேனும் , இலக்கியம் என்ற பெயருக்கு உரியது சிலப்பதிகாரமே என்று எளிதில் கூறமுடிகிறது. ஆனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இவ்வளவு எளிதாக விடை கூறமுடியாது. திருக்குறள், ஆசாரக்கோவை என்ற இரண்டும் நீதிநூல்கள்தாம். ஆனாலும்இவை இலக்கியமா? என்றால் திருக்குறள் மட்டுமே

அப்பெயர் பெறும் என்றும்ஆசாரக்கோவை இலக்கியமன்று என்றும் கூற வேண்டும்.என்றாலும் இங்ஙணம் கூறுவது எளிதன்று. உயர்ந்த நூல்களுள் ஒன்றாகவைத்து எண்ணப்பட்டு வந்த ஆசாரக்கோவையை இன்று இலக்கியமன்று என்று கூறவேண்டுமானால் தக்க காரணங்கள் வேண்டும்.இந்நிலையில இலக்கியம் என்றால் என்ன?என்ற வினாவிற்கு விடை கூற வேண்டும்.இலக்கியம் தான் கூற எடுத்துக்கொண்ட பொருளிலும் அதனைக் கூறும் வகையிலும் பொதுத்தன்மையுடையதாக இருத்தல் வேண்டும். அ.'.தாவது அனைவர்க்கும் அ.'.து இன்பமூட்டுவதாக இருத்தல் வேண்டும்.

வினாக்கள்

1) இலக்கியம் எவ்வாறிருக்க வேண்டுமென ஆசிரியர் கூறுகின்றார்?
2) நீதி நூல்கள், சிலவற்றை எழுதுக:
3) உயர்ந்த நூலாகக் கருதப்பட்ட நூல் எது?
4) நீதி நூல்களுள் இலக்கியமாகக் கொள்ளத்தக்க நூல் எதுவென ஆசிரியர் கூறுகின்றார் ஏன்?
5) இலக்கிய நூல்களெவை ?இலக்கியமில்லாத நூல்கள் எவையென ஆசிரியர் கூறுகின்றார்?

(10 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300-350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக

அ) தொழில் நுட்ப வளர்ச்சியும் தமிழும்
ஆ) விஞ்ஞானமும் சமூகமும்
இ) முத்தமிழ் வித்தகர்
ஈ) இன்றைய தமிழ் சிறுகதையின் போக்கு
உ)கற்றதனாலாய பயனென்

(20 புள்ளிகள்)

## பகுதி 11

### பிரிவு–'அ'

4. அ) சங்ககால அகத்திணை இலக்கியங்களைக் குறிப்பிட்டு அவை கூறும் பொருள் மரபினை விளக்குக:
ஆ) அகத்திணைப் பொருள் மரபு பல்லவர் காலத்தில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது?
இ) சங்கமருவிய கால அகத்திணை மரபினை விளக்குக:

(15 புள்ளிகள்)

5. அ) சோழர் கால இலக்கியப்பண்பை சுருக்கமாக விளக்குக:
ஆ) நாயக்கர் கால பிரபந்தங்கள் பற்றி ஆராய்க
இ) நாயக்கர் காலத்தில் தமிழ் வளர்த்த அரசர்களையும் ஆதீனங்களையும் குறிப்பிட்டு விளக்குக (15 புள்ளிகள்)

6. அ) ஐரோப்பியர் காலத்தின் ஆக்க இலக்கியங்கள் பற்றி விளக்கக:
ஆ) இருபதாம் நூற்றாண்டின் சிறுகதை எழுத்தாளர் கு.பா.ராஜகோபாலன் கதைகள்,புதுமைப் பித்தன் கதைகள்.பற்றி விளக்குக:
இ) தொடக்ககால சிறுகதை இலக்கியங்களின் முக்கிய பண்புகளை விளக்குக:

(15 புள்ளிகள்)

### பிரிவு–'ஆ'

7. அ) யாழ்ப்பாண வேந்தர்கள் காலத்தெழுந்த நூல்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக
ஆ) போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தெழுந்ந நூல்களை ஆராய்க
இ) ஒல்லாந்தர் காலத்தெழுந்த சைவசமயம் சார்ந்த நூல்களைப் பட்டியற்படுத்தி சுருக்கமாகவிளக்குக: (15 புள்ளிகள்)

8 அ) பத்தொன்பதாம் (19ம்) நூற்றாண்டில் ஈழத்தில் தோற்றம் பெற்ற செய்யுள் இலக்கியங்களை வகைப்படுத்துக

ஆ) இருபதாம் (20ம்) நூற்றாண்டு இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி சுருக்கமாக குறிப்பிடுக:

இ) இலங்கைத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பெறும் முக்கியத்துவத்தை விளக்குக :

(15 புள்ளிகள்)